ஸ்ரீ ராமாநுஜன் 168.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 14	1962ஷு டிஸம்பர்மீ சுபக்ருத்ஷு மார்கழிமீ	ஸஞ்சிகை 12

திருவாய்மொழி நூற்றந்தாதி-57

உண்ணுஞ்சோ றுதி யொருமூன்று மெம்பெருமான்*
கண்ணனென்றே நீர்மல்கிக் கண்ணிணைகள்—*மண்ணுலகில்
மன்னுதிருக் கோளூரில் மாயன்பால் போம்மாறன்* (57)
பொன்னடியே நந்தமக்குப் பொன்.

உண்ணும் சோறு ஆதி ஒரு மூன்றும்	உண்ணும் சோறு முதலான தாரக போஷக போக்யங்கள் மூன்றும்
எம்பெருமான் கண்ணன் என்றே	எம்பெருமானாகிய ஸ்ரீ க்ருஷ்ணனே என்று அத்யவஸித்திருந்து
கண் இணைகள் நீர் மல்கி	இரண்டு கண்களிலும் நீர் ததும்பப் பெற்று

மண் உலகில் மன்னு	இந்நிலவுலகில் நிலை பெற்றிருக்கிற
திருக்கோளூரில்	—திருக்கோளூரிலுள்ள
மாயன் பால் போம்	வைத்தமாநிதிப் பெருமாளிடம் செல்லப் புறப்பட்ட
மாறன்	—ஆழ்வாருடைய
பொன் அடியே	—அழகிய திருவடிகளே
நம் தமக்கு பொன்	—நமக்குத் தனமாகும்.

***"வாஸுதேவஸ் ஸர்வம்" என்றபடியே சோறு நீர் வெற்றிலைகளாகிற தாரக
போஷக போக்யங்களெல்லாம் கண்ணனெம்பெருமானே யென்கிற அத்யவஸாயம் நிரம்பப்
பெற்றிருந்து கண்ணீரைக் கொண்டே நிரூபணீயரான ஆழ்வார் *உண்ணுஞ்சோறு திருவாய்
மொழியில் திருக்கோளூர்க்குச் செல்லப் புறப்பட்டார். அவருடைய திருவடிகளே நமக்குத்
தஞ்சம். கீழ்த் திருவாய்மொழி போலே இத்திருவாய்மொழியும் தாய் பாசுரமாகவே செல்லு
கிறது. படுக்கைத் தலையிலே பராங்குச நாயகியாகிய மகளுடன் கூடவே படுத்துக் கொண்
டிருந்து மகளின் விரஹதாபத்துக்கு உபசாரங்கள் பண்ணிக்கொண்டிருந்த திருத்தாயார்
படுக்கையைத் தடவிப் பார்த்தாள்; எங்கும் தேடிப் பார்த்தாள்; மகளைக் கண்டிலள். 'பேய்
கொண்டதோ? பிசாசு கொண்டதோ?' என்று சங்கிக்கலாமாயினும் இவளுக்குத் திருக்
கோளூரெம்பெருமானிடத்திலிருந்த ஆவலின் மிகுதியை நன்கு அறிந்தவளாகையாலே
அத்திருப்பதிக்கே சென்றிருக்க வேணுமென்று அறுதியிட்டு அதை வெளியிட்டுரைக்கும்
பாசுரமாகச் செல்லுகிறது *உண்ணுஞ்சோறு பருகுநீர்த்திருவாய்மொழி.

திருக்கோளூர் சென்று அவ்விடத்து எம்பெருமானோடே நித்யஸம்ச்லேஷம் பண்ண
வேணுமென்றிருந்த ஆழ்வாருடைய விருப்பம் இத்திருவாய்மொழியாகப் பரிணமித்து
விட்டது போலும்.

ஸ்வாபதேச முறைமையில் இங்கு அறியவேண்டிய விஷயமாவது—உலகத்தில்,
பெற்று வளர்த்துப் பெண்பிள்ளை யௌவன பருவத்தில் நாயகனிடத்துள்ள அன்புமிகுதியால்
அவனிருப்பிடம் நோக்கிச் செல்லவேணுமென்று பதறுமளவில், படிகடந்து புறப்படுகை
குலமரியாதைக்குப் பொருந்ாதென்று தடுப்பவள் தாய் எனப்படுவாள். ஸித்தோபாயமான
எம்பெருமானைப் பற்றினவர்கள் பேற்றை விளம்பித்துப் பெறுதலில் காரணமில்லாமையாலே
அதனை விரைவில் பெறவேணுமென்னுங் காதல் கிளர்ந்து அதனால் படிகடந்து நடக்கவேண்டி

வந்த வளவில், இது ப்ரபந்நர் குடிக் கட்டுப்பாட்டுக்குச் சேராததென்று விலக்கி 'எம்பெருமான் தானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்கவேணும்' என்று சொல்லித் துடிப்பை அடக்கப் பார்க்கிற நம: பதத்திற் கூறப்பட்ட உபாய அத்யவஸாயமாகிற ப்ரஜ்ஞாவஸ்தையைத் தாய் என்பது. ஆழ்வார்க்குப் பேற்றில் த்வரை விளைந்தமை ஒரு பக்கத்திலும், அவனுடைய பேற்றுக்கு நாமோ த்வரிப்பது! என்று ஆறியடங்கியிருத்தல் ப்ராப்தம் என்கிற அத்யவஸாயம் செல்லுகின்றமை ஒரு பக்கத்திலும் ஆக இவ்விரண்டும் கலந்து பரிமாறுகின்றமை இத்திருவாய்மொழியிலே தெரியும்.

திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியில் மூன்றும் பத்தில் *கள்வன் கொல்யானறியேன்* என்கிற பதிகம் ஒருபுடை இத்திருவாய்மொழியோடொத்திருக்கும். வயலாலிமணவாளன் பரகால நாயகியின் கையைப் பிடித்துக்கொண்டு போகிறபடியைக் கண்ணாலே கண்டு தாய் சொன்னது அங்கு. இங்கு அப்படியன்றிக்கே மகளுடைய தனிப் போக்கைத் தாய் சொல்லுகிறபடி.

ஆளவந்தார் கோஷ்டியிலே *உண்ணுஞ் சோற்றிற் பிராட்டிக்கு அஞ்சவேண்டுவது அதிகமோ, *கள்வன்கொல்லிற் பிராட்டிக்கு அஞ்சவேண்டுவது அதிகமோ? என்று விசாரம் நிகழ்ந்ததாம். "*கள்வன் கொல்லில் இருவராய்ப் போனமை சொல்லுகிறது; *உண்ணுஞ் சோற்றில் மகள் தனியே போனமை சொல்லுகிறது; இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெரிய வேண்டுவது அத்தனை அவசியமன்றே; தனியே வழிபோனவளுக்கன்றோ அதிகம் வயிறெரிய வேண்டுவது" என்று அங்கிருந்த முதலிகள் சிலர் சொன்னார்களாம். அப்போது ஆளவந்தார் அருளிச் செய்தாராம்—"அங்ஙனன்று காண்மின், தனியே போனவளைப்பற்றி ஒரு பயமில்லை; இருவராய்ப் போனவிடத்திற்குத் தான் வயிறெரியவேணும்" என்று. இதன் கருத்தாவது—தனியே போனவள் தன்னுடைய லக்ஷ்யமான இடத்திற்கு நிரபாயமாகச் சென்று சேர்ந்திடுவள். இருவராய்ப் போனவிடத்திலே இருவரும் பரஸ்பரம் வ்யாமோஹத்துக்கு ஊற்றுவாயாகையாலே ஒருவரால் ஒருவர் மயங்கி விழுந்து என்னாகுமோ! என்று வயிறெரிய வேண்டிற்றாகும் என்பதாம்.

"ஆனாலும் எங்கேனும் போகிலும் இருவராயல்லதிராது அங்கு; தனியே போனவிவள் என்படுகிறாளோவென்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்." அதைத் தெரிவிக்கும் பதிகம் *உண்ணுஞ் சோறு. .... *

புதிய பதிப்புகளின் வெளியீடு.

1. ஸ்ரீராமாநுஜன் ஆசிரியர் வெளியிட்டிருந்த வான்மீகி ராமாயண வசனத்தில் யுத்தகாண்டமும் உத்தரகாண்டமும் பிரதி கிடைக்காமலிருந்தது. அவ்விரண்டு காண்டமும் மறுபதிப்பாகி முடிந்துவிட்டது. விலை ரூ. 4/-,

2. திவ்யப் பிரபந்தங்களுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீ பாஷையிலும் வியாக்கியானம் வெளியிட்டு வருகிறோமென்பது உலகமறிந்ததே. இதன் முதல் ஸம்புடம் (திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம் சென்ற வருடத்தில் வெளியிடப்பட்டதன்றோ. அதற்கு மேல் திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு, ஆகிய எட்டுப் பிரபந்தங்களுக்கும் ஸம்ஸ்க்ருத வியாக்கியானமும் ஹிந்தீ வியாக்கியானமும் தனித்தனி ஸம்புடமாக அச்சிடப்பட்டு முடிவு பெற்றிருக்கின்றது. ஹிந்தீ ஸம்புடத்தின் விலை ரூ. 8/-. ஸம்ஸ்க்ருத ஸம்புடத்தின் விலை ரூ. 7/-. தபால் செலவு 50-nP.


3. தெலுங்கு பாஷையிலும் திவ்யப் பிரபந்தடீகை அச்சாகி வருகிறது. இதில் முதலாயிரம் பூர்த்தியாகி யிருக்கிறது. விலை ரூ. 10/-. இவையெல்லாம் கிடைக்குமிடம் :—

க்ரந்தமாலா ஆபீஸ், சின்ன காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதுபயவே, எம்பார், ராமானுஜாசாரியார் ஸ்வாமி.


ஸ்ரீரங்கத்தில் நியாய வேதாந்த வித்வத் ஸார்வபௌமராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ உவே. எம்பார் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவ வுலகில் அறியதாரில்லை. அந்த ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளி இருபது ஸம்வத்ஸரங்களுக்கு மேலானாலும் அப்பெரியாருடைய புகழுடம்பு இந்நிலத்தில் நித்யஸ்ரீர் நித்ய மங்களமாக விளங்கா நின்றது. அந்த ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் த்ரிமதஸ்தர்கள் பலரையும் நியாய வித்வான்களாகச் செய்தருளினர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலர்க்கும் ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசனங்கள் செய்தருளினர். நாற்பது திரு நக்ஷத்திரங்களுக்கு மேல் வடக்கே குஜராத் மண்டலத்தில் பரோடா ராஜ்யத்தில் ஸம்ஸ்க்ருத பாடசாலாத்யக்ஷராக எழுந்தருளியிருந்து அத்தேசத்தவர்கள் பலரையும் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் விசேஷ சாஸ்த்ரங்களிலும் தேர்ச்சி பெறுவித்தருளினர்.



ஸ்ரீமதுபயவே,
எம்பார், ராமானுஜாசாரியர் ஸ்வாமி

அந்த ஸ்வாமியின் ஜ்யேஷ்ட திருக்குமாரர் இங்கே ஸேவை ஸாதிக்கின்றார். எம்பார் ராமானுஜாசார்யஸ்வாமி யென்று இவருடைய திருநாமம். ஸம்பத் ஸ்வாமி யென்று செல்வத் திருநாமம். இவர் திருத்தகப்பனார் பக்கலிலேயே ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களைப் பயின்று திருத்தகப்பனாருடைய திருநாமம் மறையாதபடி விளங்கச் செய்துகொண்டு பெங்களூரில் எழுந்தருளியிருந்துகொண்டு அங்குள்ள சிஷ்யர்களுக்கு உபய வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போரா நின்றார். இவர் "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்கிற ஆழ்வாரருளிச் செயலின்படி பல்லாண்டு பல்லாண்டு இவ்விபூதியை அலங்கரித்திருக்க வேணுமென்று ஆசாஸித்து நிற்கிறேன்,

நம்முடைய ஆந்திரமண்டல ஸஞ்சாரம்



சென்ற நவம்பர் மாதத்தில் 8-ஆம் தேதிமுதல் 26-ஆம் தேதிவரை நாம் அனேக பக்தர்களின் அழைப்புக்கிணங்கி நெல்லூர் ஜில்லா, குண்டூர் ஜில்லா, க்ருஷ்ணா ஜில்லா ஆகிய மூன்று மண்டலங்களில் ஸஞ்சாரம் செய்ய ப்ராப்தமாயிற்று. முக்கியமாக, குண்டூர் ஜில்லாவில் சில பகுதிகளில் ஸதாசார்ய ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவ க்ஷத்ரியர்களாய் ஸதநுஷ்டான பரர்களாய் விளங்குகின்றவர்களை அவ்விடங்களில் அசநார்த்திகளாய்த் திரியும் சில இதர மதஸ்தர்கள் "உங்களுடைய ஊர்த்வபுண்ட்ரதாரண—தப்த சக்ராங்கநாதி ஆசாரவ்யவஹாரங்கள் அத்யந்த ஹேயங்கள்" என்று சொல்லி வெகுகாலமாகவே நிந்தனைகள் செய்துகொண்டிருக்க, அது பொறாத அவர்கள் "பண்டிதபரிஷத்து கூட்டினால் நீங்கள் வந்து வாத கோஷ்டியில் கலந்துகொள்ளுகிறீர்களா?" என்று கேட்டு, தடையில்லாமல் கலந்து கொள்ளுகிறோமென்று அவர்களுடைய ஸம்மதியைப் பெற்று காஜிபாளையம் என்னுமிடத்தில் 11—11—62 to 15-11-62 ஐந்து நாட்கள் ஸபை கூட்டுவதாக முன்னமே அவர்களுக்கும் உலகுக்கும் தெரிவித்து "விசிஷ்டாத்வைதஸித்தாந்தஸபை" என்று பெயர்கொண்ட ஸபையைக் கூட்டினார்கள். அதற்காகவே நமக்கு நிர்ப்பந்தமான ஆஹ்வானம் கிடைத்து நாம் செல்லநேர்ந்தது. அந்த ப்ராந்தத்தில் ப்ரக்க்யாதர்களாக விளங்கும் சில பண்டிதர்களும் வந்து கூடினார்கள். வாதகோஷ்டியில் தடையில்லாமல் வந்து கலந்து கொள்ளுகிறோமென்று முன்னம் ப்ரதிஜ்ஞை செய்திருந்த வாதிகள்

"கார்த்திக மாஸத்தில் பூர்த்தியாக நாங்கள் மௌன விரதம் கொள்ளுகிற வழக்க மாகையால் ஸபைக்கு வருவதற்கு அவகாசமில்லை." என்று எழுதி ஸபா ப்ரவர்த்த கர்களுக்குக் கடிதமனுப்பி க்ருதக்ருத்யராய்விட்டார்கள். ஐந்துநாள் ஸபை ஒழுங் காக நடைபெற்று முடிந்தது. அந்த ப்ராந்தங்களில் வாழும் பலர் ஆஸ்திக்யம் வளரப்பெற்றது இந்த ஸபையின் கைகண்ட பலனாகத் தேறிற்று.

அவ்விடத்திற்கு ஸந்நிஹிதமான குண்டூர் மஹா நகரத்திலும் நாலுநாள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய தத்வார்த்த விஷயங்களான உபந்யாஸங்களை அந்நகரத் துப் பிரமுகர்கள் நடத்திவைத்தார்கள். நமது தென்னாட்டைவிட ஆந்திரமண்டலியில் விவேகிகளும் ஜிஜ்ஞாஸுக்களும் ச்ரத்தாளுக்களும் மலிந்துள்ளார்களென்று கண்டு மிகவுகந்தோம். ... . *

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ரிகை 180-ல் வெளிவந்த வியாஸம்

புத்தக விமர்சனம்

"விசிஷ்டாத்வைத விஜயத்வஜம்" (வடமொழி) ஆசிரியர்:—மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி, விஷ்ணுகாஞ்சீ, காஞ்சீபுரம். விலை :-(வடமொழியறிவோடு கூடிய) விசிஷ்டாத்வைதமதத்தில் அன்பு.

"உலகமெல்லாம் பொய்; ஒரு குணமுமற்ற அறிவொன்றேமெய்" என்கிறது அத்வைதம். "கணக்கற்ற சேதனர்களும், அசேதனப் பொருள்களும் அடங்கிய உலகம் மெய்யே; அவ்வுலகம் ஸகல கல்யாணகுணங்களோடுகூடிய நாராயணனுக்கு சரீரமாயிருக்கையால் சேதநாசேதனங்களோடுகூடிய நாராயணன் ஒருவனே உண் மைப்பொருள் என்பதும் சரி" என்கிறது விசிஷ்டாத்வைதம். இவ்விரு மதத்தவரும் வேதத்தையே பிரமாணமாகக்கொள்வதால் வைதிகர்கள் என்றே தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வேதவாக்கியங்களுக்குப் பொருள் காண்பதில் கருத்துவேற்றுமை யும், அதனால் வாதப்ரதிவாதங்களும் ஆயிரம் வருஷங்களுக்குமேலாக நிகழ்ந்து வருகின் றன; உலகமுள்ள வரையில் நிகழ்ந்துவரும் என்றும் தோன்றுகிறது. இந்நிலையில் இருசாராரும் கைப்பற்றவேண்டிய ஒழுங்கு முறை ஒன்று உண்டு. அதாவது,— ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற மதத்தைக் கண்டிக்கும்போது அந்த மதத்தைத் தவறாக அநுவதிப்பது, கீழ்த்தரமான பாஷைகளில் அதைத் தாக்குவது, அந்த மதாசார்யர்களை துர்ப்பாஷைகளால் இகழ்வது முதலான பண்புகெட்ட செயல்களைத் தவிர்க்கவேண்டும். இப்படியிருக்க, காஞ்சீ காமகோடி பீடாதிபதியின் ஆதர வோடு கும்பகோணம் அத்வைதசபையாரால் நடத்தப்பெற்றுவரும் "ப்ரஹ்மவித்யா" என்ற பத்திரிகையில் "ராமக்ருஷ்ணர்" என்பவர் பெயரில் "விசிஷ்டவாதஸங் க்ரஹம் அல்லது விசிஷ்டாத்வைத பஞ்ஜநம்" என்னும் தலைப்பில் 16 பக்கங்களே வெளியிடப்பட்டுள்ள நூற்பகுதியில் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களை வைதிகவேஷம் பூண்ட துலுக்கர்களென்றும் மற்றும் பல விதமாகவும் இகழப்பட்டிருக்கிறது. விஷ்ணுவுக்குச் சிற்றின்பம் உண்டென்றும் வேதங்கள் சாபத்தினால் தமிழ் வேத மாயினவென்றும் வைஷ்ணவர்கள் கூறுவதாகவும் இவ்வண்ணமாக மற்றும் பல பொய்யுரைகளும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து, ஸ்ரீபாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, சததூஷணீ, (அநந்தாழ்வான்) வாதாவளீ, பரபக்ஷநிராக்ருதி, பரமார்த்தபூஷணம், சதபூஷணீ வஜ்ரகுடாரம், விசிஷ்டாத்வைதவிஜயம் முதலான நூற்றுக்கணக்கான நூல்களால் அத்வைதமதம் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டது என்பதை உணர்ந்து, செய்வதறியாமல், விசிஷ்டாத்வைதிகளையும், அவர்களுடைய ஆசார்யர்களையும், விசிஷ்டாத்வைதமதத்தையும் வாய்க்கு வந்தபடி தூஷிப்பதில்

இறங்கிவிட்டார்கள் அத்வைதிகள் என்று தெளிவாகிறது. இவ்விசிஷ்டவாத ஸங்க்ரஹம் என்னும் நூற்பகுதியில் காணப்படும் தூஷணங்களை 30-பக்கமுள்ள இவ்வடமொழி நூலில் களைந்தெறிந்து, அத்வைத மதத்திலுள்ள தோஷங்கள் தவிர்க்க முடியாதவையென்று அதிஸரள கம்பீரமான ஸம்ஸ்க்ருதநடையில் நிலைநாட்டியுள்ளார் மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி. இதைக் கண்ணுற்ற ப்ரஹ்மவித்யா பத்ரிகா நிர்வாகிகள், விசிஷ்டவாதஸங்க்ரஹத்தை எழுதிய ராமக்ருஷ்ணர் காலஞ்சென்றுவிட்டார் என்றும் அப்பத்திரிகையில் விசிஷ்டவாத ஸங்க்ரஹமென்னும் தூஷணநூலைத் தொடராதபடி நிறுத்தி விடுவதாகவும் கூறியதாக இம்மாத அம்ருதலஹரீ பத்ரிகையிலிருந்து விளங்குகிறது. இப்படி வெற்றிக்கொடி நாட்டி நிற்கும் விசிஷ்டாத்வைத விஜயத்வஜநூல் ஸம்ஸ்க்ருதாபிமானிகள் அனைவராலும் படித்துப் பயன்பெறத்தக்க நூல் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? .... *

கடிதங்கள்

நமது ஸ்ரீ ராமாநுஜன், வைதிகமனோஹரா முதலான பத்ரிகைகளைக் காணும் நண்பர்கள் அப்போதப்போது பல திசைகளிலிருந்தும் பல கடிதங்கள் எழுதுவதுண்டு. அவற்றையெல்லாம் நாம் பிரசுரிக்க விரும்புவதில்லை. இப்போது இரண்டு கடிதங்களும் ஒரு மதிப்புரையும் ஈண்டு பிரசுரிக்கப்படுகின்றன. இது நம்முடைய பெருமையைப் பிரகாசப்படுத்திக்கொள்ள வேணுமென்கிற எண்ணத்தினலன்று. உலகில் மூலைமூலைகளில் ரஸிகர்களும் விவேகிகளும் அநஸூயுக்களும்விளங்குவதை உலகமறிவதற்காகவே வெளியிடுகிறபடி. .... *

உலகம் நிறைந்த புகழாளரான ஸ்ரீ உ. வே. எம்பார் விஜயராகவாசாரியர் ஸ்வாமி ஸ்ரீரங்கத்திலிருந்து 9-12-62-ல் விடுத்த திருமுகம்

ஸ்ரீமத் வேத....விண்ணப்பம். உபய குசலம். ஸ்ரீ ராமாநுஜன் 167 லக்கமுள்ள ஸஞ்சிகையும், வைதிக மநோஹரா 132 லக்கமுள்ள ஸஞ்சிகையும் ஸேவிக்க ப்ராப்தமாயிற்று. '**நான்கு தூதுகளின் மருமம்**' மிகமிகத் தெளிவோடு அடியேன் போன்றவர்களுக்கு ஏற்படும் ஸம்சயங்களை அறவே போக்கி நல்லறிவு புகட்டுவதாய் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றது. பூருவாசாரியர்களினுடைய திவ்ய ஸூக்திகளுக்கு இவ்வளவு நல்லமுறையில் தேவரீர்கள் தவிர வேறொருவரிடமிருந்தும் விளக்கத்தை எதிர்பார்க்க முடியாது. அதன் மேல் அநுக்ரஹித்திருக்கும் **தூதுநாலுக்கும் விஷயம் என்பது பற்றிய சர்ச்சை**" என்கிற விஷயமும் ஐயந்திரிபற மிகத்தெளிவாய் அமைந்துள்ளது. அப்படியேதான் வைதிகமநோஹராவில் **விசிஷ்டாத்வைத விஜயத்வஜமும்** 'பிரம்ம வித்யா' என்னும் பத்திரிகையைப் படிக்க நேர்ந்தபோது அடியேனுக்கு ஏற்பட்ட துக்கத்தைப் போக்கியது. இவை போன்ற பல திவ்ய ஸூக்திகளை யருளிச்செய்துகொண்டு தேவரீர் பல்லாண்டு எழுந்தருளியிருக்கப் பெரிய பெருமாளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம், பாகவததாஸன், **எம்பார் விஜயராகவ தாஸன்.**

(2)

ஸ்ரீ உ. வே. (பேரளம்) லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமியின் கடிதம்

[இந்த ஸ்வாமியை அடியேன் நேரில் ஸேவிக்கப் பெற்றதில்லை. ஆனால் இவர் அடிக்கடி எழுதும் கடிதங்களினால் இவர் ரஸிக வித்வந் மணியாக நெடுநாளாய் மதிக்கப்

பட்டிருக்கிறார். இவர் பேரளம் போஸ்டாபீஸில் உத்யோகஸ்தரென்று தெரிய வருகிறது. இதிஹாஸ புராணாதிகளிலும் ஸம்பிரதாய நூல்களிலும் இவர் நல்ல உழைப்பாளி யென்றும் வடமொழி தென்மொழியிரண்டிலும் ஆழ்ந்த அறிவுள்ள வரென்றும், முக்கியமாக அஸூயையை மிகமிக வென்றவரென்று மறிந்து மகிழ்ந் திருக்கிறேனென்பதை எழுதாதிருக்ககில்லேன்.]

— இவருடைய 10-12-62 தேதியுள்ள கடிதம் வருமாறு. —

ஸ்ரீமதுபயவே........விண்ணப்பம். உபயகுசலம். அநுக்ஷணம் ஸ்மரித்துக் கொண்டிருந்தாலும் விஜ்ஞாபன பத்ரிகையின் மூலம் பிரணாமங்களை ஸமர்ப்பித்து நாளாகிவிட்டது. பரம கிருபையுடன் அநுக்ரஹிக்கும் வைதிக மநோஹராதி பத்ரிகை கள் ஸேவிக்க ப்ராப்தமாயின. அடியேனுக்கு அவைகள்மூலம் கிட்டும் லாபத்துக்கு அளவேயில்லை. ஸமீபத்தில் திருக்குடந்தை சென்றிருந்தேன். ஒரு ஸ்வாமி அடி யேனை "**நாஹமர்த்தபரோ தேவி! லோகமாவஸ்து முத்ஸஹே**" என்னும் ஸ்ரீராமாயண ச்லோகத்துக்கு என்ன அர்த்தம்? என்று கேட்டார். பத்துபேர் முன்னிலையில் கேட்டுவிட்டார். உடனே தேவரீருடைய திவ்ய திருவடிகளைத்தான் ஸ்மரித்தேன். அநுக்ரஹிக்கப் பெற்றேன். வைதிகமநோஹராவில் "பகவத் குணதர்ப்பண ப்ரசஸ்திঃ" என்ற தலைப்புடன் தேவரீரால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கும் வியாஸத்தில் **அர்த்தோநர்த்தঃ** என்றவிடத்திற்கு பட்டர் ஸாதித்த பாஷ்ய ஸூக்தி எடுத்துக் காட்டப் பட்டிருந்தது நினைவுக்கு வந்து சொன்னேன். அந்த ஸ்வாமி கேட்டு ப்ரமித்துவிட் டார். 'எங்கு உள்ளது? எப்படிப்பார்த்தீர்?' என்று விஸ்மிதராய்க் கேட்டார். அடி யேன் உடனே 'ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் மஹாஸ்வாமியின் பரமாநு க்ரஹம்' என்றேன். உண்மையிலேயே அந்த ஸம்பவம் அடியேன் ஞாபகத்திலேயே யிருக்கிறது. அகத்துக்கு வந்து வியாக்கியானங்களைப் புரட்டினேன். ஸ்ரீ கோவிந்த ராஜர் ஒன்றுமே விசேஷமாகச் சொல்லவில்லை. திலகர் பிரதிபதார்த்தமாவது கூறி யுள்ளார். பட்டர் பாஷ்யத்தைப் பூர்த்தியாக ஸேவித்தவர்களுக்குக்கூட அது ஸ்புரித் திருக்காது. வைதிகமநோஹராவின் அத்புதசக்தியின் பெருமையே அது. ஸ்ரீராமா யண விசேஷார்த்த சதகம், விசிஷ்டாத்வைத விஜயத்வஜம் இவைகளின் சில பகுதி களைக் கண்டபாடமாகவே செய்து வருகிறேன்.

ஸமீபத்தில் மதராஸ் ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரொபஸர் ஸ்ரீ S. R. கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். விசிஷ்டாத்வைத விஜயத்வஜத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து தற்காலத்தில் ஸ்ரீஸ்வாமிபோல் தமிழிலோ ஸம்ஸ்கிருதத்திலோ அதிரமணீயமாக எழுதவல்ல வேறொரு வியக்தி உலகில் உண்டோ? என்று கேட்டேன். அவர் உடனே 'அது உலகமறிந்த விஷயந் தானே' என்றார். மாநஸிகமாக அஞ்ஜலிசெய்தேன். எம்பெருமானைப் பிரார்த் தித்தேன். ஆசார்ய வள்ளல் ஸ்வாமி தேசிகன்போல் ஸ்ரீஸ்வாமியும் நூறாண்டு திடகாத்திரத்துடன் எழுந்தருளியிருக்க வேணுமென்று ஆசாஸித்தேன். வேதாந்த மணித்திரள்களையும் கண்டபாடம் செய்து வருகிறேன். தேவரீர் பரமக்ருபையோடு அநுக்ரஹித்துவரும் திவ்ய ப்ரபந்த ஸம்ஸ்க்ருத வியாக்கியானங்களை கிடைத்த வரையில் ஸேவித்துவிட்டேன். மேற்பகுதிகளை அநுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

பக்தாங்க்ரி ரேணு லக்ஷ்மீ நரஸிம்ஹன்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விருந்து

காரணார்த்தமாக லௌகிக வ்ருத்திகளில் அந்வயித்திருந்தாலும் ஸ்வரூபாநுரூப வ்ருத்திகளிலும் ஸாத்யமான வரையில் அந்வயித்திருக்க வேணுமென்கிற ருசி பலர்க்குமுள்ளது. அப்படிப்பட்டவர்களின் கோரிக்கைக்கு இணங்கி இது வெளியிடலாகிறது. காலையில் ஸ்நாநஞ்செய்து திருமண்காப்பு இட்டுக்கொண்டவுடனே வாக்ய குருபரம்பரை ச்லோக குருபரம்பரை திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் ஆகிய இவற்றை யநுஸந்தித்து உடனே பெரிய பெருமாள் தொடங்கி ஸ்வாசார்யன் வரையில் தனியன்களையும் அநுஸந்திக்க வேண்டுவது அவசியம். இவற்றைச் சுருக்கமான கருத்துரையுடன் இங்கு வெளியிடுகிறோம்.

வாக்ய குரு பரம்பரை

அஸ்மத் குருப்யோ நமஃ- எமது ஆசார்யர்களைத் தொழுகிறேன்.
அஸ்மத் பரம குருப்யோ நம:- எமது பரமாசாரியர்களைத் தொழுகிறேன்.
அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:- எமது எல்லா ஆசாரியர்களையும் தொழுகிறேன்.
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:- எம்பெருமானாரைத் தொழுகிறேன்.
ஸ்ரீபராங்குச தாஸாய நம:- பெரியநம்பியைத் தொழுகிறேன்.
ஸ்ரீமத் யாமுந முநயே நம:- ஆளவந்தாரைத் தொழுகிறேன்.
ஸ்ரீராம மிச்ராய நம:- மணக்கால் நம்பியைத் தொழுகிறேன்.
ஸ்ரீ புண்டரீகாக்ஷாய நம:- உய்யக் கொண்டாரைத் தொழுகிறேன்.
ஸ்ரீமந் நாத முநயே நம:- ஸ்ரீமந் நாதமுனிகளைத் தொழுகிறேன்.
ஸ்ரீமதே சடகோபாய நம:- நம்மாழ்வாரைத் தொழுகிறேன்.
ஸ்ரீமதே விஷ்வக் ஸேநாய நம:- ஸேனைமுதலியாரைத் தொழுகிறேன்.
ச்ரியை நம:- பெரிய பிராட்டியாரைத் தொழுகிறேன்.
ஸ்ரீதராய நம:- பெரிய பெருமாளைத் தொழுகிறேன்.

ச்லோக குரு பரம்பரை

அஸ்மத் தேசிகம் அஸ்மதீயபரமாசார்யாந் அசேஷாந் குருந்
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவ மஹா பூர்ணௌ முநிம் யாமுநம்.
ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ச்ரியம் இந்திராஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே.
(வாக்ய குருபரம்பரையே இந்த ச்லோகமாக வடிவெடுத்துள்ளது.)

அஸ்மத்தேசிகம்—எமது ஆசார்யரையும், அஸ்மதீய பரமாசார்யாந்– எமது பரமாசாரியர்களையும், அசேஷாந் குருந்—(எமது) ஸகலாசார்யர்களையும், ஸ்ரீமல்லக்ஷ்மண யோகிபுங்கவ—ஸ்ரீ ராமாநுஜ முனிவரான எம்பெருமானாரையும், மஹாபூர்ணௌ—பெரிய நம்பியையும், யாமுநம் முநிம்—ஆளவந்தாரையும், ராமம்—மணக்கால் நம்பி யென்கிற ராமமிச்ரரையும, பத்மவிலோசநம்—புண்டரீகாக்ஷ ரென்கிற உய்யக்கொண்டாரையும், நாதம் முநி வரம்—ஸ்ரீமந்நாத முனிகளையும், சடத்வேஷிணம்—சடகோப ரென்கிற நம்மாழ்வாரையும், ஸேநேசம்—ஸேனைபதி யாழ்வானையும், ச்ரியம்—பெரிய பிராட்டியாரையும், இந்திராஸஹசரம் நாராயணம்—ஸ்ரீமந் நாராயண மூர்த்தியான பெரிய பெருமாளையும், ஸம்ச்ரயே —அடிபணிகின்றேன்.

(திருமந்த்ரம்)

ஓம் நமோ நாராயணாய.

எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கும் பிறர்க்கும் உரியேனல்லேன்; ஸர்வ சேஷியான நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனாகவேணும்,

(த்வயம்)

1. ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே: (பூர்வ வாக்யம்)
2. ஸ்ரீமதே நாராயணாய நம:—(உத்தரவாக்யம்)
   1. பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகப் பற்றி எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.
   2. பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ள எம்பெருமானுக்கு (இருவருமான சேர்த்தியிலே) எல்லா வடிமைகளும் செய்யக் கடவேன்.

(ஸ்ரீ கிருஷ்ண சரம ச்லோகம்)

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ.
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:

ஸர்வதர்மாந்—என்னை யடைவதற்கு உபாயமாகச் சொல்லப்பட்டுள்ள ஸகல தருமங்களையும், பரித்யஜ்ய—இவை யுபாய மென்கிற புத்தியோடே விட்டிட்டு, மாம் ஏகம்—என்னொருவனையே, சரணம் வ்ரஜ—உபாயமாக நெஞ்சிற் கொள்க. அஹம்—நான், த்வா—என்னையே தஞ்சமாகப் பற்றின வுன்னை, ஸர்வபாபேப்ய—என்னைக் கிட்டுகைக்கு இடையூறான ஸகல பாபங்களினின்றும், மோக்ஷயிஷ்யாமி விடுவிக்கக் கடவேன்; மா சுச:—துக்கப்படாதே. (என்று அர்ஜுனனை நோக்கிக் கண்ண பிரான் பகவத்கீதையில் பதினெட்டாவது அத்யாயத்தில் அருளிச்செய்தபடி)

ஸ்ரீவராஹ சரமச்லோகம்.

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி யோ நர:,
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ் ச மாமஜம்.
ததஸ் தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண ஸந்நிபம்,
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.

மநஸி ஸ்திதே ஸதி—(சஞ்சலமான) மனம் நிலை நின்றிருக்குங்காலத்தில், சரீரே ஸுஸ்வஸ்தே ஸதி—உடலம் கட்டுக் குலையாதிருக்குமளவில், தாதுஸாம்யே ஸ்திதே ஸதி—நாடிகள் ஏற்றத் தாழ்வின்றி ஸமநிலையில் நிற்குமளவில், யோ நர:—எந்த மனிதன், விச்வரூபம் அஜம் ச மாம்—ஸகல பதார்த்த ஸ்வரூபியாயும் பிறப்பிலியாயுமிருக்கிற என்னை, ஸ்மர்த்தா—சிந்திக்கக் கடவனோ, தம்—அப்படிப்பட்ட ஸத் புருஷனை, தத:—காலாந்தரத்தில், ம்ரியமாணம்—மூர்ச்சையாய், காஷ்டபாஷாண ஸந்நிபம்—கட்டையோடும் கல்லோடும் ஸமனாயிருக்கும் நிலைமையில், மத்பக்தம்—பண்டே தொண்டு பூண்டவனென்கிற காரணத்தினால், அஹம் ஸ்மராமி—(சரம ஸமயத்தில் அவன் என்னை நினைக்க அசக்தனாயிருந்தாலும்) அவனை நான் நினைக்கிறேன்; பரமாம் கதிம் நயாமி—சிறந்த நற்கதியை யடைவிக்கிறேன்.

(என்று வராஹப்பெருமாள் பூமிப்பிராட்டியை நோக்கி யருளிச்செய்தபடி.)

ஸ்ரீராம சரமச்லோகம்.

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே,
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம.

ஸக்ருத் ஏவ —ஒருகாலே, ப்ரபந்நாய—ப்ரபத்தி செய்தவன் பொருட்டும், தவ அஸ்மி இதியாசதே ச—உனக்கே ஆளாயிருக்கக்கடவேன் என்று பிரார்த்திக்குமவன் பொருட்டும், ஸர்வ பூதேப்ய: அபயம் ததாமி—ஒரு பூதத்தினிடமிருந்தும் பயமுண்டாகாதபடி அபயமளிக்கின்றேன். ஏதத் மம வ்ரதம்—இதுவே எனது விரதம்.

(என்று கடற்கரையில் விபீஷணாழ்வானுக்காகப் பெருமாளருளிச் செய்தபடி.)

இனி பெரியபெருமாள் தொடங்கி, ஸ்வாசார்ய பர்யந்தமான
தனியன்களைப்பெரியோர்களிட முணர்ந்து அநுஸந்திப்பது.

ஆசார்ய ஹ்ருதய விமர்சம்

நம்முடைய ஸம்பிரதாயத்தில் ஆசார்ய ஹ்ருதயக்ரந்தத்திற்கு நிகரான க்ரந்தம் நபூதோ நபவிஷ்யதி என்றால் மிகையாகாது. அதனுடைய போக்யதை அநுபவிக்க அநுபவிக்க 'நெஞ்சால் நினைப்பரிதால்' என்ன வேணுமத்தனை. அதனுடைய பல்வகைப் பெருமைகளைப் பற்றி அடியேன் பன்முறையும் எழுதியிருப்பது உலகமறியும். இப்போது ஒரு பெரிய விஷயத்தைப்பற்றி எழுத அவசிய மேற்பட்டதனால் எழுதுகின்றேன். அதற்கு அவதாரிகையாகச் சில விஷயங்களெழுதுகின்றேன் முந்துறமுன்னம்.

நம்முடைய ஸம்பிரதாயத்திற்கு நிதியான பகவத் விஷய மஹா க்ரந்தத்தை ஏறக்குறைய எண்பது ஆண்டுகட்கு முன்னே மிகப் பெரிய உருவத்தில் தெலுங்கு லிபியில் ஐந்து வியாக்கியானங்களோடும் அரும்பதவுரைகளோடும் மற்றும் பிரமாணத் திரட்டு முதலியவற்றோடும் பத்து ஸம்புடமாக அச்சிட்டார்களே, அந்த பதிப்பு அதிமாநுஷ மென்னத்தக்கது. ஆழ்வாராசாரியர்கள் நேராக வந்திருந்து அதை நடத்தினார்களென்னவேண்டுமேயொழிய மனிதர் நடத்தின காரியமாக அதை நினைக்கவே முடியாது. எழுத்துப்பிழை முதலியவற்றை அதில் தேடிப் பிடிக்க வேண்டியிருக்குமேயொழிய மற்ற புத்தகங்களிற்போல் மலிவாகக் கிடைக்கமாட்டாது. அப்போது 10 பெரிய வித்வான்களும் 10 ஸாதாரண பண்டிதர்களும் கூடியிருந்து வேறு எந்த காரியத்திலும் கண் செலுத்தாமல் தத்தேகாக்ரர்களாய் அப் பெரிய காரியத்தை நிறைவேற்றினார்களென்று கேள்வி. அதேபோல இப்போது பதிப்பிக்க வேணுமென்று முயன்றால் 10 லக்ஷம் ரூபா செலவு செய்தாலு மாகாதென்பது திண்ணம். உண்மையில் அந்த முத்ராபகர்களை அவதார புருஷர்களென்றே நினைத்திருப்பவனடியேன்.

அவர்கள் தாமே ஆசார்ய ஹ்ருதயத்தையும் அதன் வியாக்கியானத்தையும் அச்சிட்டிருக்க வேண்டும். இந்த திவ்யக்ரந்த முத்ரணத்தில் அந்த மஹான்கள் கை வைக்காமற் போனது பெரிய குறையே.

இந்த ஆசார்ய ஹ்ருதய மஹாக்ரந்தம் முதன்முதலாகத் தெலுங்கு லிபியில் 1876-ம் வைத்தில் அச்சிடப்பட்டது. [இற்றைக்கு எண்பத்தேழு வருஷங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டதென்கை.] அந்தப்பதிப்பில் மூலத்திலும் வியாக்கியானத்திலும் காணப்படுகிற பிழைகள் அபரிமிதம். அக்ஷரங்கள் மாறுடினவை பதங்கள் மாறுடினவை வாக்யங்கள் விட்டுப்போனவை............. இப்படிப்பட்ட அவத்யங்கள் அனேகம் புகுந்தன. ஸ்தாலீபுலாக ந்யாயேந ஸ்வல்பம் காட்டுவோம்; பதினோராவது சூர்ணையின் வியாக்கியானத்தில் "ஒண்பொருள் பொருளல்லாதவை யென்னாதே" என்கிற மூலத்திற்குச் சேர "ஆத்மாவின் சீர்மை பாராதே" என்றும் "அசித்தின் சிறுமை பாராதே" என்றும் மணவாளமாமுனிகள் ஸாதித்திருக்க, இரண்டிடத்திலும் (சீர்மை பாராதே) என்கிற பதிப்புள்ளது. ஆத்மாவுக்குச் சீர்மையுண்டு; அசித்துக்குச் சிறுமையேயொழிய சீர்மை கிடையாது. இது தவறே. இப்படி நூற்றுக் கணக்கான பிழைகள் புகுந்துவிட்டன.

இந்த ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தைத் தமிழ்லிபியில் 1906-ம் வருஷத்தில் (Late) உ. வே. திருநீர்மலைமாடபூஷி ஸ்ரீநிவாஸராகவாசாரியர்ஸ்வாமி யென்பவர் வெளியிட்டார். அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. அழகியமணவாள ராமாநுஜஜீயர்ஸ்வாமி 1905ம் வருஷத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி யுத்ஸவம் ஸேவிக்கத் திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிருந்தபோது மேலே சொன்ன திருநீர்மலை ஸ்வாமியானவர் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியிடம் வந்து, தாம் ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தைத் தமிழ் லிபியில் அச்சிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்து அந்த ஸமயத்தில்

அச்சாகியிருந்த சில பாரங்களைக் காண்பித்தாராம்; ஜீயர்ஸ்வாமி அவற்றைக் கடாக்ஷித்தருளி 'தேவரீர் லோகோபகார புத்தியினால் அபரிமிதமான பொருளைச் செலவு செய்து நடத்துகிற இந்தப் பதிப்பில் பலவிதமான பிழைகள் காண்கிறதே; ஸம்பிரதாயத்திலும் தமிழிலக்கண நூல்களிலும்,பரிசயமுள்ள மஹான்களைத் துணைகொண்டு இது செய்தால் நன்றாயிருக்கும்; (இவைத்துக்கு. அவைத்துக்கு) என்று இப்படியெல்லாம் அஸம்பத்தமாக அச்சிட்டிருக்கிறீரே; தமிழில் (இவைத்துக்கு, அவைத்துக்கு) என்கிற சொற்கள் கிடையாதே." என்று சில விஷயங்கள் ஹிதமாக ஸாதித்தாராம். அது கேட்ட அந்த திருநீர்மலை ஸ்வாமிக்கு அபரிமிதமான சீற்றம் உண்டாயிற்றாம்; எனக்கு ஸம்ப்ரதாயம் தெரியாதென்றும் தமிழ் தெரியாதென்றும் இந்த ஜீயர் ப்ரசாரம் செய்யப்பார்க்கிறார் என்று கடுஞ்சொற்களைப் பொழிந்துகொண்டே எழுந்து சென்றாராம். பிழைகளை ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டினாலுங்கூட இங்ஙனே சீறிச்சினந்து நிந்திப்பவர்களே உலகில் மலிந்திருக்கிறார்கள். அந்த ஸமயத்தில் அந்த திருநீர்மலை ஸ்வாமி தாம் பதிப்பித்துக்கொண்டிருந்த ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தில் இரண்டாம் ப்ரகரணம் முடிவுபாகம் நடந்து கொண்டிருந்ததாம். * பந்து கழல் பாவை * இத்யாதியான கடைசி சூர்ணையின் வியாக்கியானம் முடியுமிடத்தில் "தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே" என்கிற ஸ்ரீஸூக்திக்குமேல் (முந்தின தெலுங்கு பதிப்பில்) ஐந்தாறு பங்க்திகள் அடியோடு விட்டுப்போயின. திருநீர்மலைஸ்வாமியின் தமிழ்ப் பதிப்பிலும் அப்படியே விட்டிருந்தனவாம். அவற்றை ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி எழுதிக்கொடுத்தருளி "இந்த பங்க்திகள் அவச்யம் இருக்கவேண்டியவை; இதையாவது சேர்த்தால் நன்றாயிருக்கும்" என்று சொல்லியனுப்ப, "நான் வைத்துக்கொண்டிருக்கிற ஓலை ஏட்டிலும் இந்த பங்க்திகள் இல்லை; எந்த ஆதாரத்தைக்கொண்டு இதை நான் சேர்ப்பது?" என்று ப்ரபலமாக ஆக்ஷேபிக்க, பிறகு மஹதாப்ரயாஸேந சேர்க்கும்படி செய்தருளினதாக ஜீயர்ஸ்வாமி ஸாதிக்கக் கேட்டிருக்கை. இங்கே, முந்தின தெலுங்கு பதிப்பில் விட்டுப் போய் பிந்தின தமிழ்ப்பதிப்பில் சேர்க்கப்பட்ட பங்க்திகளாவன;—(தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே) என்பதற்கு மேல்—

" இந்த்ரிய வ்யதிரிக்தங்களான போகோபகரணங்களுக்கு உபலக்ஷணம்; போகஸ்தானமான தேஹத்தையும் போகோபகரணமான இந்த்ரியங்களையும் பந்துகழலித்யாதியாலே லீலோபகரணமாகச் சொல்லுகிறது. லீலையாவது தாதாத்விகரஸமான வ்யாபாரமாகையாலே "

என்றிவ்வளவுபங்க்திகள். இந்த பங்க்திகள் இல்லாவிட்டால் அவ்விடத்து ஸ்ரீஸூக்தியை நிர்வஹிக்கவே முடியாதென்பது ப்ராஜ்ஞர்களுக்குத் தெரியும். பழைய தெலுங்கு பதிப்பை வைத்துக்கொண்டு ப்ரவசனம் செய்தருளும் மஹான்கள் இங்கு விட்டுப்போனபங்க்திகளால் ஒருகுறையையுமுணராமல், அந்வயிக்கவில்லையேயென்ற க்லேசமும் படாமல் அநாயாஸமாகக் காலக்ஷேபம் நிர்வஹித்து வருகிறார்கள். பஞ்சலக்ஷணீ, சதுர்தசலக்ஷணீ முதலான நியாய க்ரந்தங்களின் அச்சுப் பதிப்புகளில் பல விபர்யாஸங்களுண்டு; க்ரந்த மியற்றினவர் (........அவச்சிந்ந) என்று சிலவிடங்களிலும் (........அநவச்சிந்ந) என்று சிலவிடங்களிலும் எழுதியிருப்பதுண்டு. அச்சில் அவை மாறிவிழுந்திருக்குமிடங்கள் சிலவுண்டு. (அவச்சிந்ந) என்றிருக்க வேண்டுமிடத்தில் (அநவச்சிந்ந) என்றும், (அநவச்சிந்ந) என்றிருக்கவேண்டுமிடத்தில் (அவச்சிந்ந) என்றும் விழுந்திருக்கிறது. சாஸ்த்ரவ்யுத்பத்தியும் ஆழ்ந்த அறிவும் பெற்று ப்ரவசனம் செய்பவர்கள் ருஜுவாக அந்வயிக்கவில்லையே யென்று க்லேசப்பட்டு, ஆலோசித்து, இங்கு அச்சுப்பிழையுள்ளதென்று தெளிந்து திருத்தி ப்ரவசனம் செய்து போருவர்கள். "சதுச்சாஸ்த்ரங்களில் எந்த க்ரந்தத்தையும் நாம் அவலீலையாக ப்ரவசநம் செய்யவல்லோம்" என்றிருக்கும் சில மஹாமதிகள் மேலே காட்டின அநவச்சிந்ந—அவச்சிந்ந—விபர்யாஸங்களில் சிறிதும் கிலேசப்படாமலும்

மயங்காமலும் அங்குலீந்ருத்தஸாரர்களாய் வெகு அட்டஹாஸத்தோடும் ப்ரவசனம் செய்தே போவர்கள்; இங்குப் பிழையுள்ளதென்று கண்டறியவேமாட்டார்கள். ப்ராஜ்ஞர்கள் எடுத்துரைத்தாலும் இது விச்வாமித்ரஸ்ருஷ்டியென்று ஏசி நிற்பர்கள். இவ்விதமாகவே ப்ரக்ருத க்ரந்தத்திலும் மற்றுமுள்ள க்ரந்தங்களிலும் நேர்ந்திருக்கிற விபர்யாஸங்களை ப்ராமாணிகர்கள் எடுத்துக்காட்டினால் சில அதிகாரிகள் வீணை ஆக்ஷேபங்களைச்செய்து போதுபோக்குவது தவிர, சுவைகண்டு மகிழ பாக்யமற்றவர்களாகிறார்கள்.

இரண்டாவது ப்ரகரணத்திலேயே "அழுந்தொழும் ஸ்நேஹபாஷ்பாஞ்ஜலியோடே" இத்யாதி சூர்ணையில் நம்மாழ்வார்க்கு, இளையபெருமாள் பரதாழ்வான் சத்ருக்நாழ்வான் ப்ரஹ்லாதாழ்வான் முதலான பல புராண புருஷர்களோடு ஸாம்யம் சொல்லுகையில் சத்ருக்நாழ்வானோடு ஸாம்யம் நிர்வஹிக்கிற விடத்தில் (மூலத்தில்) "புலன்கொள் நித்யசத்ருவிசிந்தநம்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. பாகவத சேஷத்வமே பரம புருஷார்த்த மென்று அறுதியிட்ட சத்ருக்நாழ்வான் பெருமாளுடைய வடிவழகில் ஈடுபடாதே பரமபாகவதோத்தமனை பரதாழ்வானுடைய அநுவ்ருத்தியிலேயே ஊன்றியிருக்கச் செய்தேயும், அந்த பரதாழ்வானுடைய உகப்புக்காகப் பெருமாளுடைய வடிவிலேயும் நெஞ்சு சென்று பெருமாளையே சிந்தனை செய்து கொண்டிருந்ததுபோல நம்மாழ்வாரும் இங்ஙனே யிருந்தாரென்று நிரூபணம் செய்கிறது இங்கு. சத்ருக்நாழ்வான் படியை ஸ்ரீ ராமாயண ச்லோகங்கள் கொண்டும், ஆழ்வார் படியைத் திருவாய்மொழிப் பாசுரங்கள் கொண்டும் நிரூபித்தருளுகிறார். சத்ருக்நாழ்வான் பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று அதனையே நெஞ்சில் சிந்தனை செய்து கொண்டிருந்தானென்பதற்கு ஸ்ரீ ராமாயணத்திலிருந்து ப்ரமாணம் காட்டியாகவேண்டும். மூலத்தில் ஸ்ரீ ராமாயண ப்ரமாண மொன்று காட்டப்பட்டிருக்கிறது. ஆசார்ய ஹ்ருதய க்ரந்தமானது தமிழ்ப் பிரமாணங்களையோ, ஸம்ஸ்க்ருதப் பிரமாணங்களையோ எவ்விதமாகக் காட்டுகிற வழக்கமோ அவ்விதமாகவே இங்கும் காட்டியிருக்கிறது. அதாவது 'நித்யசத்ரு விசிந்தநம்' என்று மூலமுள்ளது. அயோத்யாகாண்டத்தில் எண்பத்தொன்பதாவது ஸர்க்கத்தில் (3) "ஜாகர்மி நாஹம் ஸ்வபிமி தமேவார்யம் விசிந்தயந்" என்கிற ச்லோகம் சத்ருக்நாழ்வானுடைய வார்த்தையாக ஸ்பஷ்டமாய்க் காணப்பட்டுவருகிறது. இந்த ச்லோகமேதான் ப்ரக்ருத ஸ்தலத்திற்கு மூலகாரரால் மூலமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. (விசிந்தயந்) என்பதை (விசிந்தநம்) என்று மாற்றி ஸாதித்திருப்பதானது வாக்யாந்வயத்திற்காக. இந்த க்ரந்தத்தின் சைலியே இப்படிப்பட்டதாகையால் இதில் விவாதம் வேண்டா. ஏவஞ்ச "தமேவார்யம் விசிந்தயந்" என்கிற சத்ருக்நவசநத்தையே கொண்டு மூலம் அமைக்கப்பட்ட தென்பது நிர்விவாதம். இவ்விடத்தில் மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் இருக்கும் படியை இனி விமர்சிப்போம்.

> "சத்ருக்நாழ்வான்.......பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று *விசிந்தயந்* என்கிறபடியே எப்போதும் அத்தை மநஸ்ஸிலே கொண்டிருக்குமா போலே"

என்று அருளிச் செய்து விட்டு,

> "விசிந்தந மென்கிறவிதுக்கு இப்படி வ்யாக்யானம் பண்ணிற்று இதின் பட்டோலை யானதிலே உறுமோவென்று நித்யசத்ருவை வென்று புலன்கொள் வடிவை விசிந்தய நாயிருக்கும் என்று விசிந்தயந் என்று ஒரு வசன முண்டாகவுமெடுத்து இப்படி இவர்தாமே அருளிச்செய்து வைக்கையாலே. இவ்விடத்திலும் சிந்தநமென்னமல் விசிந்தநமென்றது அவ்வசந ஸூசகமாகவிறே. 'விசிந்தயந்' என்கிற வசநம் இன்ன விடத்திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை; வந்த விடத்திலே கண்டு கொள்வது"

என்றருளிச்செய்து தலைக்கட்டியிருக்கிறார். இத்தால் 'விசிந்தயந்' என்கிற வசனமிருக்குமிடம் மாமுனிகளுக்குத் தெரியவில்லை யென்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்

பட்டதாகிறது. அயோத்யாகாண்டத்தில் (89—3) * தமேவார்யம் விசிந்தயந் * என்றிருப்பது அல்பஜ்ஞர்களான அஸ்மதாதிகளுக்கும் நன்ருகத் தெரிந்திருக்க இது ஸர்வஜ்ஞரான மாமுனிகளுக்குத் தெரியவில்லை யென்றல் இதனில் மிக்க வியப் புண்டோ? இங்கே தத்துவமென்ன என்று விவேகிகள் யாவரும் விமர்சிக்க ப்ராப்தம். ஆங்காங்கு காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமிகளிலே சிலர் இங்கே சொல்லுவதென்ன வென்றல்; மணவாளமாமுனிகள் ஸர்வஜ்ஞராயிருக்கச் செய் தேயும், ராமக்ருஷ்ணதிகள் அஜ்ஞத்வ அசக்தத்வங்களை பாவித்ததுபோலத் தாமும் பாவிக்கவேண்டி, தமக்குத் தெரியாத விஷயங்களும் உண்டென்று காட்டவேண்டி இங்ஙனே அருளிச் செய்து வைத்தார் என்கிருர்கள். வேறுசிலர் சொல்லுவதாவது— "இன்னவிடத்திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை" இத்யாதி பங்க்திகள் மாமுனி கள் அருளிச் செய்தவையாக இருக்கமாட்டா; பிற்காலத்தில் ப்ரக்ஷிப்தங்களாக இருக்கும்—என்பது. இப்படிப்பட்ட ஸமாதானங்கள் அத்யந்தம் அஸமஞ்ஜஸங்கள். முந்தின ஸமாதானத்தில், விசிந்தயந் என்கிற ப்ரமாண மிருக்குமிடம் மாமுனிகளுக்கு நன்ருகத் தெரிந்திருந்தும் வேணுமென்றே தெரிந்ததில்லை யென்று எழுதினு ரென்பது மாமுனிகளை விப்ரலம்பக கோடியிலே யாக்குவதாகும். இது ஸ்வாமியின் இயல்புக்குச் சிறிதும் சேர்ந்ததன்று. பிந்தின ஸமாதானம் (ஸ்ரீஸூக்திகள் ப்ரக்ஷிப்தம் என்பது) ஸுதராம் அநுபபந்நம். ஏனென்னில், உண்மையில் ப்ரமாண வசனத்தைப் பூர்த்தியாக எடுத்துக்காட்ட வேண்டியிருந்தும் காட்டியருளவில்லை; பட்டோலையிலிருந்து ஸ்ரீஸூக்தியை யுதாஹரித்திருப்பது பிறர்க்கு ஸாத்யமான காரியமன்று. ஆகவே ப்ரக்ஷேபவாதமும் சிறிதும் அங்கீகரிக்கத் தக்கதன்று.

பின்னை இங்கு உண்மையென்னவெனில்; ஊக்கத்தோடுகேண்மின். ஸ்ரீராமாய ணுதி இதிஹாஸ புராண ச்லோகங்களில் பலவகையான பாடபேதங்கள் பூர்வாசார்யர் களின் காலத்திலேயே நேர்ந்திருக்கின்றன. இதற்குப் பலநிதர்சனங்கள் காட்டவேண் டிய துண்டு; அது மற்றெருகாலாகும். இவ்விடத்தில் "தாமே வார்யம் விசிந்தயந்" என்று பாடமிருப்பது போலவே "ராமமேவாநுசிந்தயந்" என்கிற பாடமும் முன் னேர்களின் காலத்திலேயே யிருந்திருக்கிறது. கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கி யான அவதாரிகையின் அரும்பதவுரையிலே "ராமமேவாநுசிந்தயந்" என்கிற பாடமே யிருப்பதை எல்லாப் பதிப்புகளிலும் காண்கிறோம். ஸ்ரீராமாயண ஸ்ரீகோசங்களி லும் சிலவற்றில் இங்ஙனே பாடம் காண்கிறோம். ஆசார்ய ஹ்ருதயகாரருக்கு "தமே வார்யம் விசிந்தயந்" என்கிற பாடமே கிடைத்திருக்கிறது. மணவாளமாமுனிகளுக்கு "ராமமேவாநு சிந்தயந்" என்கிற பாடமே கிடைத்திருக்கிறது. மூலத்தில் விசிந்தநம் எனறும், பட்டோலையிலும் 'விசிந்தயந்' என்றும் ஸுஸ்பஷ்டமாக இருக்கையாலே இவ்விடத்திற்கு (அநுசிந்தயந்) என்றுள்ள வசனத்தை யெடுத்துக்காட்ட ஔசித்ய மில்லையாயிற்று. அந்த வசனம் இங்கு ஸ்புரிப்பதற்கே இடமில்லாமல் போயிற்று. ஆசார்ய ஹ்ருதயக்ரந்தம் அப்போது ப்ரவசந பரம்பரையிலும் விசேஷமாக வந் திருக்கவில்லை போலும். ஆக 'ராமமேவாநு சிந்தயந்' என்கிற பாடமே கொண்டிருந் தவர் மாமுனிகள்; "தமேவார்யம் விசிந்தயந்" என்கிற பாடமே கொண்டிருந்தவர் ஆசார்ய ஹ்ருதயகாரர். இதனல் இவ்விடத்தில் இப்படிப்பட்ட க்லேச முண்டாயிற் றென்று உண்மையுணர்ந்த பெரியார்கள் உபபாதிக்கிருர்கள்.

மூன்றும் ப்ரகரணத்தில் நாரை கொக்கு குருகுகளுக்கு ஸ்வாபதேச மருளிச் செய்கிற "ஆசறுதூவி யென்னும்" என்கிற சூர்ணையின் வியாக்கியானத்தில் "தாய் வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரை தேடி" என்கிற மூல ஸூக்திக்குப் பொருள் விவரிக்குமிடத்தில் "தங்கள் வாக்கால் உபகரிக்கும் பகவத்விஷயத்தை உபஜீவித் திருக்கும் குழைச்சரக்கான சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக ஸாத்ம்யமான பகவத் விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரித்து" என்று அச்சிட்டிருக்கி ருர்கள். இதில் "சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக" என்கிற பங்க்திக்கு என்ன

பொருளென்று விமர்சிக்கவேணும். 'உபாயாநுகுணமாக' என்றது இவ்விடத்திற்கு ஒருவிதத்திலும் சேராது. சிலர் "வயோநுகுணமாக" என்றிருக்குமென்று ஊஹிக்கிறார்கள். நம்முடைய புத்தியைக்கொண்டு நாம் ஸ்வதந்திரமாகத் திருத்துவதிற் காட்டிலும் ஓலை ஸ்ரீகோசத்தைக்கொண்டு திருத்தலாமென்று பார்த்தபோது ஸுப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஓலை ஸ்ரீகோசத்தில் தாம் ஸேவித்த பாடத்தைப் பரமக்ருபையுடன் அநுக்ரஹிக்க ப்ராப்தமாயிற்று. "சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக" என்பதல்ல; "சிஷ்யர்களுக்கு பாகாநுகுணமாக" என்பது திருத்தமான பாடம். இப்போது எவ்வளவு அழகாக அர்த்தமாகிறதென்று பார்க்க. சிஷ்யர்களின் ஜ்ஞான பாகத்திற்குத் தகுந்தபடி ஆசார்யர்கள் ஆராய்ந்து உபதேசிப்பர்களென்று சொல்லுவது மிகவும் பொருத்தமானதன்றோ. ககாரத்தை யகாரமாக மாற்றி விட்டதனாலுண்டான க்லேசம் எவ்வளவென்று பார்க்க.

மூன்றாம் ப்ரகரணத்திலேயே "தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்" என்ற விடத்து வியாக்கியானத்தில் "அவதாரங்களுக்குப் பிற்பாடரானவர்களுக்கு அநுபாவ்யமான அர்ச்சாவதாரத்திலே 'ஸர்வம் ஸஹே' என்கையாலே பரத்வாதிகளில் அநுபாவ்யமான குணங்களெல்லாம் பூர்ணமென்கை" என்கிற பங்க்திகள் தெலுங்கு பதிப்பிலும் தமிழ்ப் பதிப்பிலும் ஏக ரீதியாக அச்சிடப்பெற்றுள்ளன. இங்குக் காட்டிய 'ஸர்வம் ஸஹே' என்கிற ப்ரமாணம் எந்த அம்சத்திற்கு ஸம்வாதமாக அருளிச்செய்ததென்று விமர்சிக்கவேணும். "அர்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணு:" இத்யாதிகளிற் சொல்லப்பட்ட (அர்ச்சாவதார அஸாதாரணமான) ஸர்வஸஹிஷ்ணுத்வத்தை குணபூர்த்திக்கு நிபந்தமாகக் காட்டுவதற்கு 'ஸர்வம் ஸஹே' என்கிற ப்ரமாணம் மேற்கோளாக இங்குக் காட்டப்பட்டதென்று சிறிதும் கூசாமலே சில காலக்ஷேப ஸ்வாமிகள் ஸாதித்து வருகிறார்கள். "அபூத பூர்வம் மம பாவி கிம் வா ஸர்வம் ஸஹே மே" என்கிற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியிலுள்ளதான (ஸர்வம் ஸஹே) என்கிற விது ப்ரக்ருத ஸ்தலத்திற்கு அணுமாத்ரமாவது பொருந்துமாவென்று வினவினால் பொருந்தமாட்டாததை மணவாளமாமுனிகள் அருளிச்செய்வரோ? அவரருளிச்செய்திருக்கும்போது, பொருந்துமாவென்கிற விசாரம் செய்ய நாமார்? என்று சீறுகிறார்கள். அஸ்மதீய ஸம்ப்ரதாய க்ரந்த தூஷணைகதீக்ஷிதர்களாகவுள்ள பிறர்களோ வென்னில் உண்மையுணராது தூஷிக்கத் தலைப்படுகிறார்கள். இங்கு உண்மையான பாடம் என்னவென்றால், ஸ்ரீவசனபூஷண வ்யாக்யாநாதிகளிலும் உதாஹ்ருதமான "ஸர்வம் பூர்ணம் ஸஹோம்" என்கிற உபநிஷத் வாக்யமே இங்கு (ஸர்வம்ஸஹே) என்று விகாரமடைந்திட்டது. இவ்விகாரம் அச்சுப்பிரதிகளில் மாத்திரமன்று; நாலைந்து ஏட்டுப்பிரதிகளிலும் நமக்குப் புலப்பட்டது.

ஆக அறுபது எழுபது வருஷங்களுக்கு முற்பட்ட தெலுங்கு தமிழ்ப் பதிப்புகள் பலவகைப் பிழைகள் மலிந்திருந்ததனால் சுத்தமான பதிப்பு வெளியிடுவிக்கவேணுமென்கிற மனோரதம் அடியேனுக்கு 25 வயதில் தோன்றியது. அப்போது சென்னை கராலபாடி ஆழ்வாரய்ய மூலமாக ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபகஸபை ஏற்பட்டு அதன் சார்பாக உபய வேதாந்த க்ரந்தங்கள் பலவும் அச்சாகி வந்துகொண்டிருந்ததனால் அந்த ஸபையின் மூலமாகவே இந்த ஆசார்ய ஹ்ருதய வியாக்யானத்தை அச்சிடுவிக்க முயன்று ஸபாதிகாரிகளின் அநுமதியை ஸம்பாதித்து, அப்போது அந்த ஸபையின் பதிப்புகளெல்லாம் காஞ்சீபுரத்திலேயே பவழவண்ணர் ஸன்னிதி ஸமீபத்தில் நடந்து வந்தபடியால் அங்கே இவ்வாசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தைத் தெலுங்கு லிபியில் அச்சிடுவிக்கத் தொடங்கினதில் இரண்டு பிரகரணமே அச்சாயிற்று. அதுவரையில் அடியேன் 'ஆசார்ய ஹ்ருதயதாத்பர்ய ஸாரம்' என்பதையும் எழுதிக் கொடுத்து அதையும் அத்தோடு சேர்த்து அச்சிடுவித்திருக்

கிறேன். மூன்று நான்கு பிரகரணங்கள் அப்போதே தொடர்ச்சியாக அச்சிட முடியாதபடி அந்த ஸபைக்கு சைதில்யம் ஏற்பட்டது. அதனால் அந்த இரண்டு பிரகரணங்களை மட்டும் (வியாக்கியானத்தோடு) அடியேன் தெலுங்கு லிபியிலேயே தனிப்புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டேன்.

பிறகு சில வருஷங்கள் கழித்து ஸ்ரீமத் வரவர முனீந்த்ர க்ரந்தமாலை அச்சிட்டதிலும் ஆசார்ய ஹ்ருதய வியாக்யானம் சேர்ந்திருக்கிறது. அதுவும் தெலுங்கு லிபியானபடியால் தமிழ்லிபியிலபேக்ஷித்தவர்களுக்காக அந்த லிபியிலும் தனிப் புத்தகமாக அச்சிட்டிருக்கிறேன். அந்த ஸமயத்தில் கோயில் பத்தராவிஸ்வாமி திருமாளிகையிலிருந்தும் மற்றுஞ்சிலவிடங்களிலிருந்தும் ஏட்டுப் பிரதிகளைத் தருவித்து மிகவும் சிரமப்பட்டே பரிசோதித்திருக்கிறேன். அடியேன் இதை அச்சிடுவதற்கு முன்பு மூலபாடமே பலபல விடங்களில் அசுத்தியுற்றிருந்தது. பல பெரியார்களை அநுவர்த்தித்து, ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு பெரியாரிடம் ஒவ்வோர் அருமையான பாடத்தை க்ரஹித்து நாற்பது பாடங்களுக்குமேல் சுத்தமாக்கி வெளியிட்டிருக்கிறேன். ஸ்ரீராமாநுஜன் 106ல் அவை காணத்தக்கன. பலர் 'நமக்குத் தவறான பாடம் வந்திருக்கிறது' என்பதை இன்னமும் தெரிந்து கொள்ளாமலே யிருக்கிறார்கள்.

